செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்
20.07.2020 அன்று பகல் 12.00 மணி அளவில்
நடைபெற்றதன் கூட்ட நடவடிக்கைகள்

தலைமை திரு. ந. சே. கண்ணன் பி.கி.
தனி அலுவலர் அவர்கள்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி வார்டு எண். 2 ஜவஹர்லால் நேரு ரோடு கதவு எண். 131/62 பழைய வரிவிதிப்பு எண். 144/904 புதிய வரிவிதிப்பு எண். 144/002/00103 ஆனது அரசு போக்குவரத்து கழகத்திற்கு உட்பட்டது ஆகும். மேற்படி வரிவிதிப்பு எண்ணிற்கு 2007-2008 ஆம் ஆண்டுக்கான சொத்துவரி தொகை ரூ. 1488/- ஆகும். மேற்படி தொகைக்கு காசோலை எண். 808653/08.01.2008 இந்தியன் வங்கி, சென்னை காசோலை வழங்க வரவின பதிவேட்டில் பக்கம் எண். 46 வரிசை எண். 146ல் 13.12.2006 முதல் 27.02.2008 முடிய காசோலை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசோலையை சொத்துவரி கணக்கில் வரவு செய்வதற்கு பதில் பொது நிதிக் கணக்கில் 09.02.2008ல் வரவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், மேற்படி வரிவிதிப்பு எண்ணிற்கு 2007-2008 க்கான தொகை ரூ.1488/- நிலுவையாக உள்ளது. மேற்படி வரிவிதிப்பு எண்ணிற்கு மேற்படி நிறுவனத்தில் இருந்து 2007-2008 முதல் 2017-2018 வரை ரூ. 15330/- காசோலையாக வழங்கி உள்ளார்கள். மேற்படி வரிவிதிப்பு எண்ணுக்கு 2007-2008க்காக நிலுவை தொகையை கழித்து வஜா செய்தால் தான் அடுத்த ஆண்டுக்கான நடப்பு வரை உள்ள தொகைக்கு ரசீது வழங்க இயலும். எனவே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83ல் 1ன் படி மேற்படி தொகையை வஜா செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை வஜா செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி வார்டு எண். 19 கே.சி.சாலையில் இருந்து பம்புஹவுஸுக்கு செல்லும் சாலையின் இருபுறமும் உள்ள வடிகால் சாலையின் மட்டத்திலிருந்து மிகவும் தாழ்வாகவும், பழுதடைந்தும் உள்ளதால் சாலையின் அகலம் குறைந்து வாகனங்கள் சாலையின் விளிம்பு வரை செல்வதால் வடிகாலின் பக்கச் சுவர் தாழ்ந்து இருப்பதின் காரணமாக விபத்துகள் ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது. மேலும், சாலையின் விரிப்புகள் சேதமடைந்து சாலை முழுவதுமாக சேதமடைய வாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்படி வடிகாலின் பக்கச் சுவரை சாலையின் மட்டத்திற்கு உயர்த்தி கட்டுதல் அவசியமாகிறது. எனவே மேற்படி பணிக்காக ரூ.2.20 லட்சத்திற்கு தயார் செய்த மதிப்பீட்டிற்கும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு... மன்றம் அனுமதி வழங்கலாம்.